கபிலர் பாடல்களில் காட்சி உருவகம்

தமிழண்ணல்

கபிலர் பாடல்களில் காட்சி உருவகம்

தமிழண்ணல்

சிந்தாமணிச் செல்வ வெளியீடு

4/585 வண்டியூர் வழி

சதாசிவநகர், மதுரை - 625 020.

நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர்	:	கபிலர் பாடல்களில் காட்சி உருவகம்
ஆசிரியர்	:	தமிழண்ணல்
விலை	:	ரூ.20
பக்கங்கள்	:	24
எழுத்து	:	10 புள்ளி
நூல் அளவு	:	14 X 22 செ.மீ. டெம்மி
பைண்டிங்	:	அட்டைக் கட்டு
தாள்	:	வெள்ளைத்தாள்
ஒளி அச்சு & அச்சிட்டோர்	:	ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. Cell :9894153242

கபிலர் பாடல்களில் காட்சி உருவகம்

IMAGERY IN KAPILAR'S POEMS

கபிலர், சங்க காலத்திலேயே மிகப் பெரும் புகழ் பெற்றிருந்தார். அவர் 'ஐந்து புலன்களும் மாசுபடாத துறவி'[1] என்றும், 'பொய்யாத நாவினையுடைய கபிலன்'[2] என்றும் புகழப்பட்டுள்ளார். அரசர்கள் அவர் தம்மைப் பாட வேண்டும் என்று ஆசைப்படும் அளவு, மிக்க அறிவுடையவராகவும் பொருட்செறிவு மிக்க செய்யுளியற்றும் வன்மையுடையவராகவும் புகழ்மிக்கவராகவும் விளங்கினார்.[3] மற்றைய புலவர்கட்கும் பாணர்கட்கும் இடமில்லாதபடி புகழ் நிலைக்கும் பாடல்களை மிகுதியாகப் பாடியவர்.[4] அரசவைகளும் பணியுமாறு அறநெறியைச் செய்து, வீரத்தோடும் நாவன்மையுனும் இழிவுதரும் ஆசைகளின்மையால் கவலையற்ற நெஞ்சுடனும் திகழ்ந்தவர்.[5]

பறம்புமலைக்குத் தலைவனாகிய பாரி என்ற வள்ளலுடன் கபிலர் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். பறம்பு நாடு முந்நூறு ஊர்களையுடையது. அவன் தன்னிடம் இரந்து வரும் பாணர், புலவர் முதலிய அனைவர்க்கும் தன்னிடம் உள்ளவற்றையெல்லாம் உவகையோடு கொடுத்தான். தன்னுடைய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டான். வழியில் கொழுகொம்பு இன்றி வாடிக்கிடந்த முல்லைக் கொடிக்குப் பற்றிப் படர்வதற்கு ஏற்ற வகையில் தன்னுடைய பொன்தேரை நிறுத்தி விட்டு வந்ததால், மிக்க புகழ் பெற்றான். பறம்பு மலை ஒன்றே எஞ்சியிருந்தது. பாரி, பாரியின் சுற்றத்தவர், கபிலர், பறம்பில் வாழ்ந்த மக்கள் என ஒரு சிலரே கூடி வாழ்ந்தனர். இந்நிலையிலும் பாரி தன் பொருள் வளம் அனைத்தையும், வெற்றிச் சிறப்பால் பெற்றவையனைத்தையும்

---

1. புறம் : 126
2. மேலது : 174
3. மேலது : 53
4. மேலது : 126
5. பதிற்று : 85

வாரி வழங்கிக் கொண்டேயிருந்தான். இதனால் அவனுடைய புகழ் மூவேந்தர் புகழிலும் மேம்பட்டது. மூவேந்தர்களும் பொறாமை கொண்டு பாரி மீது படையெடுத்தனர். வள்ளன்மை மிக்க பாரியை வெல்லவும் வளம்மிக்க பறம்பை அழிக்கவும் திட்டமிட்டுத் தங்களுடைய பெரிய படைகளனைத்தையும் கொண்டு வந்து அச்சிறிய மலையைச் சுற்றிலும் நிறுத்தினர். எங்கும் களிறுகள், குதிரைகள், தேர்கள், காலாட்படைகள்! பெரிய கடல்போலக் காட்சியளித்தன. அக்கடல் ஒலி போலப் போர் முரசுகள் முழங்கின.

இம் முற்றுகையால் விளைந்த சோகக் கதை பெரிதாகும். தமிழக வரலாற்றில் ஓர் அரிய நிகழ்ச்சியுமாகும். பறம்பு மலை வளமிக்கது. எண்ணற்ற சுனைகளையும் அருவிகளையும் உடையது. உழவரால் உழப்படாமலே தாமே கிடைப்பனவாகிய தேன், தினை, பலாப்பழம், வள்ளிக்கிழங்கு ஆகிய நான்கு பயன்களையுடையது. இங்ஙனம் தன்னிறைவுடையதாகலின் பறம்பில் வாழ்வோர் சரணடைய வேண்டிய நிலைமை ஏற்படவே இல்லை. பாரியின் படைத்தொகை, மூவேந்தர்களின் படைத்தொகுதியை நோக்கச் சிறியதாகும். எனினும் மூவேந்தர்களால் பறம்பை வெல்ல முடியவில்லை. முற்றுகையிட்டுப் பல்லாண்டுகள் ஆகியும் பறம்பு பணியவில்லை. கபிலர் ஒரு தந்திரத்தைக் கையாண்டு, மலையிற் கிடைக்காததாகிய நெல்லையும் மலைக்குக் கொணரச் செய்தார். நூற்றுக் கணக்காகக் கிளிகளைப் பழக்கி, அவற்றை நெடுந்தூரம் பறந்து சென்று, முற்றிய நெற்கதிர்களை வாயில் கவ்விக் கொண்டு வரச் செய்தார். அவைகள் பறம்பை விட்டு, வரிசை வரிசையாகக் காலையில் புறப்பட்டுச் சென்று, பகல் முழுதும் எங்கும் அலைந்து சுழன்று இரை தேடி, நன்கு முற்றிய கதிர்களைச் சுவை வாயில் கவ்விக்கொண்டு மாலையில் தவறாமல் வந்து சேரும்.

மூவேந்தர்களின் முற்றுகை முறையான செயலன்று என்று, கபிலர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவர்கள் கேட்காததால், "நீங்கள் வாட்போரால் பறம்பை வெல்லதல் இயலாது, உங்களுடைய தேவிமார்களையும் கூட்டிக்கொண்டு ஆடியும் பாடியும் வந்தால், என்னையும் பாரியையும் பறம்பையும் நீங்கள் பரிசிலாகப் பெறலாம்", என்று இடித்துக் கூறினார். பறம்புமலை 'எதிர்த்து வருபவர்க்கு அரியது'; இரந்து வருபவர்க்கு எளியது என்று அறிவுரை கூறினார். ஆயினும் மூவேந்தர்கள் முற்றுகையை விடவில்லை.

அக்காலப் புலவர்கட்கும் பாணர்கட்கும் எல்லா அரசர்களிடத்திலும் வேறுபாடின்றிக் கலந்து பழகும் உரிமை இருந்தது. அவர்கள் நான்கு திசைகளிலும்

சுற்றித்திரிந்து, வள்ளலகளைப்பாடி, பெற்றதைக் கொண்டு, சுற்றத்தை வாழவைத்துக் கவலையில்லாக் கலைஞர்களாக வாழ்ந்தனர். ஆயினும் சில புலவர்கள் தாங்கள் பழகிய அரசர்களுடன் உயிரொன்றிய நட்புடன் பழகி வாழ்ந்தார்கள். அதியமான் நெடுமான் அஞ்சியிடம் ஔவையார் கொண்டிருந்த நட்பு போற்றத்தக்கது. கோப்பெருஞ்சோழன் என்ற மன்னனிடம் பிசிராந்தையார் கொண்டிருந்த நட்பு உள்ள ஒற்றுமையால் பிணைந்தது. ஆனால் பாரி வள்ளலிடம் கபிலர் கொண்டிருந்த நட்பு, மிகக் கொடிய துன்பங்களாகிய நெருப்பிலிட்டுப் புடம் போட்ட, தூய, சிறந்த நட்பாகும். பாரியிடம் முப்பெரும் வேந்தர்களும் பகைத்து முற்றுகையிட்ட பொழுதும், கபிலர் அவனைப் பிரிந்தாரில்லை. இறுதிவரை துணையாக இருந்தார், அவன் இறந்த பிறகும் அவனுடைய மகளிர்க்கு மணம் முடிக்க அரும்பாடு பட்டார். இறுதியில் மறுபிறப்பிலும் பாரியுடன் வாழுமாறு செய்க என்று விதியை (ஊழ்வினை) வேண்டி வடக்கு நோக்கி உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தார்.

எனவே கபிலருடைய வாழ்வில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சிகள் அவர் மனத்தாழத்தே பதிந்து கிடந்து, அவருடைய கவிதைகளனைத்திலும் எங்ஙனம் பொங்கிப் பரந்து வெளிப்பட்டுள்ளன என்பதை இங்கு இந்த "Imagerical study" மூலம் காட்ட விரும்புகிறேன். அவருடைய பண்பு நலன்கள், பழக்கவழக்கங்கள், கலையார்வம், வாழ்க்கை அனுபவங்கள் இயற்கையில் அவர் மிகவும் ஈடுபட்டுச் சுவைத்தவை ஆகியவற்றைப்பற்றிய உருவகங்களையும் எழுதினால் இக் கட்டுரை மிக விரியுமென அஞ்சி இங்கு விட்டு விட்டேன், ஆனால் அவர் நெஞ்சத்தே பறம்பும் பாரியும் அழியா இடம் பெற்று, அவர் பாடிய பாடல்கள் தோறும் அழகிய கவிதைக் கற்பனை வடிவங்களாக வெளிப்பட்ட முறைமையினை இங்கு நான் எடுத்துக்காட்டுவதால்—அஃதாவது கபிலருடைய பாடல்களனைத்திற்கும் வற்றாத கவிதை யூற்றுக்களாக விளங்கியவர்கள் பறம்பும், பாரியும் என நான் இங்கு நிலைநிறுத்துவதால் இருபயன்கள் விளையும் என நம்புகிறேன். ஒன்று கபிலரின் கடலினும் ஆழ்ந்த அன்பின் திறம், இரண்டு அவர் பெயரில் உள்ள பாடல்களிலெல்லாம் இம் 'முத்திரை' உளதா என்று காட்டி அதன் மூலம் அவையனைத்தும் கபிலரே எழுதியவை தாமா அல்லவா என்பதை மெய்ப்பிக்க முயல்வது. இந்த இரண்டிலும் காட்சி உருவகம் (Imagery) பற்றிய இவ்வாய்வு எவ்வளவு தூரம் உதவுகிறது என்பதை இக் கட்டுரையைப் படிப்போர் அறிந்து கொள்ளுதல் கூடும்.

போரும் மனமாறுபாடும் பற்றிய உருவகக் காட்சிகள்

(The Images of Conflict and war)

மூவேந்தர்கள் இட்ட முற்றுகையே நெடுநாள் நீடித்ததல்லாமல், போர் நிகழ்ச்சிகள் பெரிதாக ஏற்படவில்லை. கபிலர் மாலைப்பொழுது விரைந்து வருகிற காட்சிக்கு உவமை கூறும் பொழுது, "மாலைப் பொழுது விரைந்து வருவது சினங்கொண்ட வேந்தன் படையெடுத்து வருவதுபோல இருக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

கடல் போன்ற சேனை பற்றியும், அச்சேனைகளின் முரசுகள் கடல் போல ஒலிப்பது பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். கரிய மேகங்கள் மலையைச் சூழ்வது கூட அவருக்கு வேந்தர் முற்றுகைக் காட்சியாகவே உளது. மிக விரிவான உவமை மூலம் இக் காட்சியைக் கபிலர் விளக்குகிறார்.

"கிழக்குக் கடலிலிருந்து நீரை முகந்து கொண்டு வரும் மேகம் நள்ளிரவில் மலை மீது முற்றுகையிடுகிறது. 'முரசு' ஒலிக்கும் வேந்தர்களின் சேனையில் யானைப்படையை வரிசையாக நிறுத்தியது போல அம் மேகங்கள் உள்ளன. அப்படைகள் கையில் தாங்கிய கொம்புகளின் மேலே அசைகின்ற கொடிகளைப் போல மேகம் மின்னுகிறது. முரசுகளைப் போல இடியோசை ஒலிக்கிறது" – என்று மிக விரிவாக விளக்கும் இக் காட்சியும், முற்றுகை என்ற சொல்லாட்சியும் 'வேந்தர் படை போல' என்ற சொல்லையே எடுத்தாளுதலும் இங்குக் கபிலர் மூவேந்தர்கள் பறம்பை முற்றுகையிட்டதையே உவமை கூறுகிறார் என்பதைத் தெளிவு படுத்துகின்றன. இங்ஙனம் மேகங்கள் போல முற்றுகையிடுதல் (நற்.336) மேகம் போலக் கூடுதல் (ஐங்.218) மேகக் கூட்டம் படைத்தொகுதியை நினைப்பூட்டுதல் (பதி.62) ஆகியவை கபிலர் பாடலில் அடிக்கடி வருகின்றன.

"நீர் நின்று வற்றிய சேற்றுநிலத்தில், நிணம்மிக்க தலையையுடைய கொழுத்தமீனைத் தின்பதற்காக, நாரைக் கூட்டம் குவிந்த வெண்மையான மணல் மேட்டில் ஏறி வரிசை வரிசையாக நிற்கிறது. இக்காட்சி அரசர்களின் ஒளிபொருந்திய காலாட்படையின் அணி போல விளங்குகிறது. (நற்.291) பிறிதோரிடத்தில் கூட்டமான மீன்களை உண்ணுதற்காகக் கூடியிருக்கும் பறவைகளின் ஒலியை தேரில் கட்டியுள்ள சிறிய நாவையுடைய மணிகளின் ஓசைக்கு உவமிப்பதும் இதனுடன் ஒத்துளது (நற் .267).

குறுந்தொகையில் "போருக்குப் பொங்கி எழுகின்ற குதிரைபோல, ஆண் குரங்கு வேகமாகத் தாவிப் பாய்ந்ததென்று " (385) குறிப்பிடுகிறார். புறநானூற்றில் பாரியின் அருமையறியாமல் படையெடுத்துவந்த மூவேந்தர்களின் பொன்னாற் செய்த அணி கலம் முதலியவற்றையுடைய குதிரைகள் பறம்பு மலையைச் சுற்றி முற்றுகையிட்டு நிற்க, பாரியின் பெண் மக்கள் மலை உச்சி மேல் ஏறி நின்று அக்குதிரைகளை 'இத்தனை' என்று எண்ணுவார்கள் என்று கபிலர் புறத்திணைப் பாடல் ஒன்றில் கூறியுள்ள வரலாற்றுச் செய்தியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

இங்ஙனம் போர்முற்றுகை பற்றியும் அணிவகுப்புப்பற்றியும் உவமை பல கூறும் அவர், போர் நிகழ்ச்சி பற்றி அதிகமான உவமைகளை எடுத்தாண்டிலர். அதற்குக் காரணம் மூவேந்தர்களின் முற்றுகை பல ஆண்டுகள் நீடித்தும், இருவரும் எதிர்நின்று போரிடவில்லை.

வாட்போர் புரியும் போது, படைவீரர்களின் மார்பில் பூமாலைகள் போல் வாட்கள் சுழலுகின்றன. (பதி.66). வீரர்கள் பெரிய <u>வேந்தர்களின்</u> யானைகளை வென்று, அவற்றின் தந்தங்களைக் கள்ளுக்கு விலையாகக் கொடுப்பார்கள். (பதி.68. கு.பா.128-129)

இம்முற்றுகை நிகழ்ச்சி நெடுநாள் நீடித்ததாகலின், அதனை நிறுத்துதற்குக் கபிலர் பெரிதும் முயன்றார். அவரது சமாதான முயற்சிகட்கு இசையாமல், பறம்பை வென்றே தீர்வதென்ற இறுமாப்புடன், முற்றுகையைக் கைவிடாது நின்ற மூவேந்தர்களை எள்ளி நகையாடி அவர் பல பாடல்களைப் பாடினார். பறம்பு மலை உழவர் உழாமலே விளையும், தினை, தேன், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு என்ற நான்கையும், உடையதென்றும், பறம்பை அடைய வேண்டும் என்றால் பாணர்கள், விறலியர் போல ஆடிப்பாடி வந்தால் எளிதாக அடையலாம் என்றும் போரிட்டு அடைய முடியாதென்றும் இடித்துரைத்தார். எனவே வேந்தர்கள் பாரியிடையே சமாதானம் செய்து வைக்க முயன்ற இத்தூது முயற்சியும், இதிலடைந்த தோல்வியும் அவர் பாடல்களில் எதிரொலித்துள்ளன.

வண்டு தேனுண்ணுவதற்கு விருப்பம் கொண்டு, வேங்கைப்பூங்கொம்பு என்று எண்ணிக்கொண்டு, தம்முள் மாறுபட்டுச் சண்டையிடுகின்ற புலி முகத்திலும், யானையின் புள்ளி படர்ந்த முகத்திலும் மாறி மாறி மொய்க்கிறது. அது வலிமை மிக்கவர்களும் வெகுளி கொண்டவர்களுமாகிய போர்புரியும் மன்னர்களை, அன்பு கொண்டு நட்புக்கொள்ள வைக்க முயலுபவர்களைப் போல இருக்கிறது. பூங்கொம்பு என்று அலைந்து வண்டு ஏமாறும் நிலைமையை மிக

அழகுபடக் கூறியுள்ள கவிஞர் திறம் வியக்கற்பாலது. (கலி 46) குறிஞ்சிப்பாட்டில், தலைவிக்கும் அவள் தாய்க்குமிடையே மன ஒற்றுமை ஏற்படுத்த முயன்று அஞ்சுகிற தோழி, தன் அச்சத்திற்குக் கூறும் உவமை,

'இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல,
இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலென்'

(கு.பா. 27-29)

என்பதாகும். மூவேந்தார்பால் அஞ்சாது எதிர்நின்று, பாரி சார்பாக எடுத்துரைத்த இப் பெருங்கவிஞர்க்கு, உள்மனத்தில் இங்ஙனம் தூது செல்லும் பொழுது இரு சாராரிடத்தும் மனக்குறை ஏற்படாமல் சமாதானம் செய்து வைக்க வேண்டும் என்றும் அவ்விருசார்பும் பற்றிய அச்சம் இருந்ததென்பது புலனாகிறது. தலைவன் தன் காதலிக்குத் தழையுடையைப் பரிசிலாகக் கொடுத்தான். அதைப் பெற்று உடுத்துக் கொள்ளவில்லையென்றால் அவன் மனமுடைந்து நலிவானாதலால் அதற்கு அஞ்ச வேண்டியுளது. வாங்கிக் கொண்டு சென்று உடுத்துக் கொண்டாலோ 'இத்தழையுடை யாது' என்று அதட்டிக் கேட்கும் தாயை நினைந்து அஞ்சவேண்டியுளது என்று இரண்டு அச்சங்களைப் பற்றிப் பிறிதோரிடத்திலும் குறிப்பிடும் பொழுது (நற். 359) இத்தூது அச்சம் பற்றிய 'உருவகம்' அமைந்துள்ளமையை உணர்கிறோம்.

பாரிவள்ளலின் தன்னிகரற்ற உயர்வுகளையும் பெருமைகளையும் நினைந்து போற்றும் கபிலருக்கு, அவனுடைய புகழ்கண்டு பொறாமை கொண்ட வேந்தர்களைப் பற்றி நன்மதிப்பு இருந்ததாகத் தெரியவில்லை. பாரியைப் போல மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலும் கவிலரை ஆதரித்து, அவரால் பாடப் பெற்றவன். பேராற்றலுடைய காரியை மூவேந்தர்களும் போர் ஏற்படும் போது பொருள் கொடுத்து தத்தமக்கு உதவிபுரியுமாறு வேண்டுவர். ஆனால் அவர்கள் அவ்வுதவியினால் பெற்ற நன்மைக்கு ஏற்ப நன்றியறிதலுடன் நடந்து கொண்டார்களா என்பது ஐயமே. "தன் பதவியை இழந்த மன்னன் பிறருதவி பெற்று பதவியை அடைந்த பிறகு, உதவியை மறந்துவிடுவது போலத் தலைவியைத் தலைவன் மறக்கலாகாது" என்று தோழி வேண்டுகிறாள். (குறு.225) "மூவேந்தர்கள் தம்மிடம் உண்டு பயனடைந்தவன் எதிர்ப்பட்டால், அவனை அச்சுறுத்திப் பல பயன்களையும் அவனிடமிருந்து அடைவது போல" (கலி.64) என்ற உவமையும் வேந்தர்களின் சுயநலத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

முற்றுகை, தூது பற்றிய உருவகங்களேயன்றி, வேந்தாகட்கும் பாரிக்குமிடையேயிருந்த, போருக்குக் காரணமான மனமாறுபாட்டுணர்வும், வஞ்சனையும், அதை எதிரேற்று வெல்லும் செம்மாந்த ஆண்மை போன்றனவும் கபிலர் மனத்தே இடம் பெற்றன. யானைக்கும், புலிக்குமிடையே நிகழும் பூசல்களை வைத்து இம் 'மனமாறுபாட்டை' எப்போதும் மனத்துள் கருவறுக்கின்ற பொறாமையை – சினத்தை அவர் உணர்த்துகிறார்.

பொதுவாகக் குறிஞ்சி நிலத்திற்குரிய புலியும் யானையும் போர் புரிவது பற்றிய உவமைகளை, குறிஞ்சிப்பாடல்களில் புனைவதுண்டு, கபிலரும் இதனைப் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளர். (நற். 336, கலி. 45,46, 48) போரிட்ட யானையின் தந்தம் பற்றியும் அது இரத்தக்கறை படிந்து காட்சியளிப்பதையும் உவமை கூறியுள்ளார்.

ஆண்புலி பெண்யானை ஈன்ற குட்டியைப் பற்றுவதற்காகப் பலாவின் நிழலில் ஒளிகிறது. (ஐங்216). பெண்யானை, கன்று முதலியவற்றோடு திரியும் ஆண்யானையைப் பிடிக்கமுயன்று, அவை தப்பிவிட்டதால் சினங்கொண்ட புலி காட்டில் நள்ளிரவில் அலைந்து திரிகிறது. (அ.118) பெண்புலி ஈன்றணிமையாதலால் பசித்துக் கிடக்க அதற்கு மான் இறைச்சி தருவதற்காக நள்ளிரவில் புலி இரைதேடி அலைகிறது. பின்னர் காட்டுப்பசுவைக் கொன்று இழுத்து வருகிறது. (அகம்.238).

வேங்கைப் பூ உதிர்ந்து கிடக்கும். சிறுகுடிசையைப் புலியென்றே கருதிய யானை அஞ்சி, வழியிலுள்ள மூங்கில்கள் சாயுமாறு விரைந்து செல்கிறது. (அ.12) வேங்கைமரம் புலிபோன்று பூத்து விளங்குவதனால், அதனை யானை தாக்கிச் சிதைக்கிறது. (நற்.217) அங்ஙனம் வேங்கை மரத்தைக் குத்திய யானை, தன் தந்தங்களைப் பிடுங்கமாட்டாமல் வருந்துகிறது. இக்காட்சி கயிலைமலை மேல் இறைவியுடன் கூடி இறைவன் வீற்றிருக்க, அரக்கர் தலைவனாகிய இராவணன் அதைப் பெயர்த்தெடுக்கக் கையைக் கீழே கொடுத்துப் பெயர்க்கமாட்டாமல் வருந்துவதைப் போல இருக்கிறது. (கலி.38) யானையின் முறம் போலும் செவிப்பக்கமாக மறைந்து தாக்குகிறது, புலி. அப்புலிமீது சினங்கொண்ட யானை, அதனைக் குத்தி உடலைக்கிழித்துச் சினம் தணியப்பெற்ற பின்னர் தன் கிளையுடன் கூடி மலைச்சாரலில் திரிகிறது. இது பாரதக்கதையில் துரியோதனனைத் தொடையை வெட்டியறுத்து உயிரைப்போக்கிய பீமசேனனைப் போலவும். பகைவீரர்களின் ஆண்மையை அழித்த திருமாலைப் போலவும் உளது. (கலி.52) ஒரு யானை பகலில் புலியொன்றைக் கொன்றுவிட்டு உறங்கியது.

கனவிலும் அதே காட்சி தோன்றவே, சினத்தோடு விழித்துக் கொண்ட யானை, எதிரே புதிதாக மலர்ந்து விளங்கிய வேங்கை மரத்தையும், புலியென்றே கருதித் தாக்கி அதன் அழகைஅழித்து விட்டது. (கலி.49) புலியை வென்ற யானையினது புலால் வீசும் தந்தத்தில் வண்டுகள் மொய்க்கின்றன. (கலி 43) இரவில் புலியைக் கொன்ற யானை இடியேறுபோல் முழங்கியது. (ந.353)

யானை புலி சண்டை மட்டுமன்று – காட்டுப்பன்றியுடனும் புலி போரிடுகிறது. (ஐ.265, 266) யானைகள் தம்முள் தாம் மாறுபட்டுப் பொருதலும் காளைமாடுகள் தம்முள் பொருதலும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன (கரி.53. கு.பா.135-136).

இங்ஙனம் இவ்வுவமைகள், சொல்லோவியங்கள் அனைத்திலும் 'மாறுபாட்டுணர்வே' தலைதூக்கி நிற்பதன் காரணம் மூவேந்தர், பாரி மீது கொண்ட நெடுநாட் பகைமையை நினைவிற் பெற்றதாகுமெனில் மிகையாகாது.

மூவேந்தர் முற்றுகையின் போது கபிலர் ஓர் அரிய செயலச் செய்தார். பறம்பு தன்னிறைவு பெற்றதாயினும் பல ஆண்டுகள் தொடர்ந்து மூவேந்தர் முற்றுகையிட்டதால், உணவுப்பொருள்களை – முக்கியமாக அரிசியுணவைப் பெறுதல் அரிதாயிற்று. இதனால் கபிலர் கிளிகளைப் பழக்கி நெடுந்தூரம் சென்று நல்ல வளமான நெற்கதிர்களைக் கவ்விக் கொண்டு வரச் செய்து மக்கட்கு உணவு வழங்கினார் என்று நக்கீரரும் ஔவையாரும் பாடியுள்ளனர். (அகம் 78, 303)

தினைப்புனத்தில், தலைவி கிளிகளை விரட்டிக் காப்பது பற்றிய செய்திகள் பொதுவானவையே. ஆனால், கிளிகளால் தான் தலைவி தினைப்புனம் வர நேர்ந்தது என்று தலைவன் அவற்றுக்கு நன்றி பாராட்டுதலும் (ஐங்.288) தலைவனுடன் கூடி மகிழ்வதால் தலைவி பகலில் தினைகடிவதை மறந்து போவதும் (கலி.50) அவள் எவ்வளவு விரட்டினாலும் கிளிகள் போகாமல் தினையைத் தின்னுதலும் (ஐ.282) போன்ற கற்பனைகள் புதுமையுடையனவாக உள்ளன.

அவள் குரல் இனிமையாக இருப்பதாலும், அவள் கையிலுள்ள தட்டை என்ற கருவி அவ்வின்னிசைக்கேற்ப தாளமிடுதல் போல உள்ளதாலும் கிளிகள் அவள் தங்களை அழைக்கின்றாளேயன்றி விரட்டவில்லையென்று வந்து தினைகளில் உட்காருகின்றன. இதைக்கண்டு செய்வதறியாது தலைவி அழுகிறாள். (குறு 291) அவள் குரலே கிளி போல இருப்பதால், அவள் விரட்டினாலும் மேலும் மேலும் கிளிகள் வந்து உட்கார்ந்து தினைப்புனத்தை அழித்து விடுமோ என்று பெற்றோர்கள் அஞ்சிக் காவலே வேண்டாமென்று அவளை வீட்டிற்கு அழைத்துக் கொள்ளுதலும் கூடும் (ஐ.289). தினைப்புனம்

மலையை ஆள்பவன் கொடைப்பண்பு போல, கிளிகளெல்லாம் கூடியுண்ணத் தினைக்கதிர்களை வாரிக் கொடுக்கிறது. (நற். 376) தினையறுவடை செய்த பிறகும் கிளிகள் பிரியமனமில்லாத பேரன்புடையனவாக அப்புனத்திலேயே உள்ளன. (ஐங்.284) அவள் தினைப்புனம் காக்கின்றாள் என்பதை இக்கிளிகள் தாம் அறிவித்தன. எனவே இவை 'வெள்ளம்' என்ற பேரெண்ணினை எல்லையாகக் கொண்ட பல ஊழிகளுக்கு மேலும் வாழ்வனவாகுக. (ஐங்.281) நெல்லைக் கொண்டு வந்தனவாகிய கிளிகளைப் பற்றி நேரே பாடாமல், குறிஞ்சித்திணையில் தினைபற்றியே கூறலாமாதலால் தினை கொண்டு சென்ற கிளிகளையே தொடர்ந்து இவ்வாறு உருவகம் செய்திருப்பது சிந்திக்கத் தக்கது. "தினையைக் கவர்ந்து போகும் கிளி" பற்றிய காட்சி உருவகம் தான் கபிலர் பாடலில் பெரும்பான்மையாக உளது. மற்றவர் பாடல்களில் தினையைக் கவரவரும் கிளி வெருட்டப்படுதலாகிய காட்சி மட்டுமே பெரும்பான்மையாக உளதாகையால், அதற்கு எதிர்மறையாகக் கபிலர் பாடிய காரணம் அவரது சொந்த அனுபவமே என்று அறிகிறோம்.

வெற்பு, உருவகக் காட்சி (Image of the hills)

கபிலரது அகப்பாடல்களில் வரும் குறிஞ்சி நிலம் பற்றிய வருணனைகளிலும், குன்றம் பற்றிய உவமைகள், உருவகங்கள், வருணனைகளிலும் ஓர் ஒற்றுமை, இழைபோல ஊடாடி நிற்கக் காண்கிறோம். அக்குன்று பற்றிய உருவகக் காட்சிகளிலெல்லாம் 'பறம்பு மலையே' தோன்றக் காணுகிறோம்.

குறிஞ்சிப் பாடல்களில் வரும் தலைவன், அந்நிலம் சார்ந்த 'வெற்பன்' 'பொறையன்', 'சிலம்பன்' எனப்படுவான். பெயர் சுட்டப்பெறாது ஒவ்வொரு பாடலிலும் தனித்தனியே எடுத்தாளப் பெறும் அத்தலைவனாகிய உருவகக்காட்சியிலும் குறிஞ்சி நிலத்தை ஆளும் மன்னனாகிய 'பாரியையே' நினைவு கூரச் செய்கிறார் கபிலர். இங்ஙனம் 'அகப்பாடல்களில் சுட்டி ஒருவர்ப் பெயர் குறியாது' பாடவேண்டிய விதிக்குட்பட்டு வெற்பினைப் பற்றி அகப்பாடல்களில் பொதுவாகப் பாடும் மரபிற்கு ஏற்பப்பாடுகின்ற கபிலர், அவ்வெற்பு பறம்புமலையேயாகுமாறு தம் உள்ளார்ந்த உணர்வினால் தம்மையும் அறியாது எங்ஙனம் உணர்த்தினார் என முதற்கண் காண்போம். குறிஞ்சி நிலம் பற்றிப் பாடுகிற புலவர்கள் பொதுவாகக் குறிஞ்சியிலுள்ள கருப்பொருள்களையே உவமையாக எடுத்தாள்வார்கள். ஆகையால் அந்நிலத்து வாழும் விலங்கினங்கள்,

பறவைகள், இயற்கை பற்றிய உவமை உருவகங்களைக் கொண்டு கபிலரது மனநிலையைக் காணுதல் அரிதாகும். ஆனால் பறம்புமலையின்பால் அவர் கொண்ட தனியன்பு, எங்ஙனம் அகப்பாடல்களில் வெளிப்பட்டதென்பது கொண்டு, நாம் இதை நிறுவுதல் சாலும்.

பறம்பின் வளத்தில் நம்பிக்கையுடைவர் கபிலர். அதன் உழவர் உழாது கிடைக்கும் பயன்களாகிய மூங்கில் நெல், பலாக்கனி, வள்ளிக்கிழங்கு, தேன் ஆகியவை பற்றியும் கணக்கற்ற நீர்ச்சுனைகள் பற்றியும் பலபாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். மூவேந்தரிடம் யானும், பாரியும், பறம்பும் இருக்கிறோம். ஆடிப்பாடிவரின் பெறலாம் என்று கூறும் போது பறம்பைத் தங்களுடன் சமமாக வைத்துப் பேசுகிறார். பாரி இறந்தபின் பறம்பைப் பிரிய நேர்ந்த போது அவர் பாடிய பாடல் உள்ளம் உருக்குவதாகும். பாரி மகளிரைத் திருமணம் செய்து வைக்க, உரிய கணவன்மாரைத் தேடிக்கொண்டு அவர் புறப்படுகிறார். திரும்பிவராத நிலையில் பறம்பை விட்டுப் போகிறார். அவ்வாறு புறப்பட்டுப் போகும் போது, பறம்புமலையை ஓர் உயிருள்ள பொருளாக மதித்து அதனிடம் விடைபெறும் காட்சி உள்ளம் உருக்குவதாகும்.

"மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறு
பெட்டாங்கு ஈயும் பெருவளம், பழுனி
நட்டனை மன்னோ முன்னே, இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே! (புறம் 113)

புறம்பு மலையே மிகுந்த மதுவையும் ஆட்டுக்கறியையும் குறையாத, இறைச்சியுடன் கூடிய வளமான துவையல் சேர்த்த சோற்றை, விரும்பியவாறு கொடுத்து மிக்க வளம் நிறைந்து விளங்கி எம்பால் முன்பு நட்புக் கொண்டனை; இப்போது திரண்ட வளையலணிந்த முன்கையினையுடைய இப்பாரி மகளிர்க்குரிய மணமகன்களைத் தேடிக் கொண்டு செல்கிறோம். பாரி இறந்தானென்று கலக்குமுற்று செயலற்று, நீர் ஒழுகும் கண்களுடன், பறம்பே நின்னை வணங்கி, வாழ்த்திப் புறப்பட்டுச் செல்கிறோம். மிக்கப்புகழுடைய புறம்பே போய் வருகிறோம்.

கபிலர் இவ்வாறு தம்மோடு நெடுநாட்கள் நட்புக்கொண்டு உதவிய பறம்புமலையிடம் உள்ளமுருக விடைபெற்றுச் சென்றாராயினும், அவர் சென்ற வழி நெடுகிலும் பறம்பைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றார். எவ்வளவு நெடுந்தூரம் சென்றாலும் அப்பறம்பு அவர் கண்ணை விட்டு அகலவே இல்லை. அதனால் பழைய நினைவுகளை விட்டு மீளமுடியாதவராகத் துன்பத்தில் தோய்ந்து கண்ணீர் உகுத்தார். குடிக்கும்போது சிதறும் கள் ஒழுகியதால் சேறாகும் முற்றத்தையுடைய; இரவலர்க்குத் தேர்களை வழங்குகிற பாரியின் பறம்புமலை.

"ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும்; சிறுவரை
சென்று நின்றோர்க்கும் தோன்றும், மன்ற" (புறம்.114)

(பறம்பு இங்கு நிற்பவர்க்கும் காட்சியளிக்கும்; சிறது தூரம் சென்று நின்று (புறம்.114) பார்ப்பவருக்கும் உறுதியாகத் தோன்றும். அதைப்பிரிந்து சென்றாலும் கண்ணை விட்டு மறையாது) என்று பாடினார். இப்பறம்புக் காட்சி அவர் மனத்தைவிட்டு அகன்றிலது என்பதை ஐங்குறுநூற்றில் வரும் பல அகப்பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

தலைவனுடைய மலையைக் காணும் போதெல்லாம் தலைவியின் கண்கள் எங்ஙனம் நீரைச் சொரிந்தன என்பதைத் தோழி கூறுகிறாள்.

"அவர்நாட்டு
மணிநிற மால்வரை மறைதோறு
அணிமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே" (ஐங்.208)

"அவருடைய நாட்டில் நிற்கும் நீலமணி போலும் நிறமுடைய மலை. கண்ணைவிட்டு மறையுந்தோறும் அழகிய மலர் போன்ற அவளது கண்கள் நீரைச் சொரிந்தன" என்று கூறும் இது, புறம்பைப் பார்த்துக் கண்ணீர் விட்ட கபிலர் பாடியதாகும்.

தோழி தலைவனைப் பிரிந்து ஆற்றாத ஒரு தலைவியிடம் 'நீ சிறிது மறந்து அமைதி பெறுக' என வேண்டினாள். அதற்கு அவள் 'நான் மறந்துவிடத்தான் முயல்கிறேன்'. ஆனால் "கீழ்க்காற்றால் மலரும் அவரைப் பூவைப் போன்ற வெண்முகில்களை அணிந்து, அவருடைய குன்றம் எப்போதும் காட்சியளித்துக் கொண்டேயிருக்கிறதே, எப்படி அக்குன்றுக்குரியவராகிய அவரை நான் மறப்பேன் என்று தலைவி வருந்தியுரைக்கிறாள்.

"தோன்றல் ஆனாது அவர் மணிநெடுங் குன்றே" (ஐங்.209) என்கிறாள்.

"நம் தோட்டத்துச் சிறு துறுகல்லின் மேல் ஏறி நின்று அவர் நாட்டு மலர் மிகுந்த குன்றை நோக்கி நின்றால் தலைவியின் காதல் நோய் தணிதலும் கூடும்" என்று தோழி கூறுகிறாள் (ஐங்.210). தோழி தலைவனிடம் உன்னைத் தேடிவந்து காணவேண்டியதோர் கட்டாயமும் ஏற்பட்டால், உன்னுடைய ஊர் ஓங்கித் தோன்றுகிற இப்பெரிய மலைக்கு எப்பக்கமாக உளது? சொல்க என்று மலையைச் சுட்டிக் காட்டிக்கேட்கிறாள் (ஐங்.237). தோழி தலைவனிடம் உனது ஊர்க்கண் விரைந்து பாய்ந்து ஓடும் அருவியைக் கண்டாலும் இவள் நின் நினைவால் அழுகின்றாள் என்று தலைவி பற்றிக் கூறுகிறாள். (ஐ.251) தோழி தலைவியின் காதல் நோய் பற்றிக் குறிப்பிடுமிடத்தில் "நெடிய மலையினைக் காணினும் அழுகின்ற நோய் உடையவளாயினாள்" என்று குறிப்பிடுகிறாள். (ஐ.270)

('நெடுவரை, காணினும் கலிழும் நோய்') (ஐ.270)

தோழி தலைவியிடம் நீ தலைவனைப் பிரிந்து எங்ஙனம் வாழ்வாய் என்று நுதலைப் கேட்டபொழுது, தலைவி "அவர் நாட்டுக் குன்றத்தை இதோ நான் பார்த்தேன், என்று தலைப்பார். அது பிரிவினால் வாடாத - பசலை யூராத ஒளியிழவாத பழைய நிலையை என் நெற்றி அடைந்துவிட்டதல்லவா? இது போல அவர் மலையைப் பார்த்துப் பார்த்துப் பிரிவாற்றியிருப்பேன்" (ஐ.249) என்று கூறுகிறாள்.

இப் பாடல்களனைத்திலும் மலை பற்றிய உருவகக் காட்சி, அதை <u>நெடுந்தூரத்திலிருந்து காண்பதாகிய</u> ஒரே கருத்தினை இழை போலக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். பறம்பு விட்டுப் பிரிந்த கபிலர் "இங்கும் தோன்றும்; சிறிதுதூரம் செல்லினும் தோன்றும்" எனப் புறப்பாடலில் தம் உள்ளக் கருத்தை நேர்முகமாகப் புலப்படுத்தினார். இவ் அகப்பாடல்கள் அனைத்திலும் தலைவனைப் பிரிந்த தலைவி, அக்குன்றினைத் தூரத்தே நின்று காண்பதாக, கண்ணீர் உகுப்பதாக, ஆறுதல் பெறுவதாகத் தமது உள்ளுணர்ச்சியையே மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். இவ்விருவகைப் பாடல்களாலும் ஒரு மாதிரி மனத்தையே நாம் உய்த்து உணர்கிறோம்.

கலித்தொகையில் வரும் குன்றம் ஒன்றைப்பற்றி, 'வள்ளிக் கிழங்கு, தேன், தினை' போன்ற விளைவுகளை உடையது என்று கூறுவது (கலி.39) புறப்பாடலில் பறம்பு மலையின் வளம்பற்றி அவர் பாடிய பாடற்கருத்துடன் ஒற்றுமையாக உளது

(புறம்.109.) ஐங்குறு நூற்று 214 ஆம் பாடல் 'தேனும் பலாவும்' கிடைக்கும் குன்றை அவர் கற்பனை செய்வதும் முற்கருத்துக்கு ஒப்புமையுடையதாகும். இத்தகைய உருவகக் காட்சிகள் பல கபிலரிடத்து உளவாயினும், அவை குறிஞ்சிப் பாக்கட்குரிய பொது உருவகங்களாகவே கருதவும் இடந்தருவன. கபிலர்க்கு, குன்றம் செல்வத்திற்கும் வெற்றிக்கும் அறிகுறியாய் அகன்ற மார்பிற்கு உவமையாகிறது.(ஐ.220) அரியதுன்பமாகிய அவலத்திற்கும் அளவறிய முடியாத மாலை உவமையாகிறது. (கலி. 48) இங்ஙனம் அவரது மகிழ்ச்சிக்கும் அவலத்திற்கும் மலையே ஓர் உருவகப் பிழம்பாக (symbol) விளங்கியது.

வெற்பன் உருவகக் காட்சி (Image of the hero)

பறம்பு மலையைப் போலக் கபிலரின் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றவன் பாரி. அவர் இறுதிவரை பாரிக்காகவே வாழ்ந்தார். பாரி பொருட்டு மூவேந்தரையும் இடித்துரைத்து அறிவுரை கூறினார். பாரி மகளிரை – பாரிக்குப்பின்னர் – நற் கணவன் மார்க்குக் கொடுக்க அரும்பாடு பட்டார். பாரியின் வீரமும் கொடைக் குணமும் நற்பண்புகளும் அவர் மனத்தில் நீங்கா இடம் பெற்றன.

அகப்பாடல்கள் என்பன வரலாற்றையோ, குறிப்பிட்ட தலைவன், தலைவியரையோ கொண்டு பாடப்படுவனவல்ல, குறிஞ்சித் திணை சார்ந்த அகப்பாடலில் வரும் தலைவன் குறிஞ்சி நிலத்திற்கு உரியவன். அம் மலை நிலத்தவன் – குடிமகனாவான். அவனைத் திணைப் பெயராலோ (வெற்பன், சிலம்பன்) தொழிற் பெயராலோ (வேடன், வேட்டுவன்) என்று குறிப்பிடுவர். கபிலர் இவ்விதிகட்கு உட்பட்டே பாடியுள்ளாராயினும் அவரைப் பாதுகாத்து உற்ற துணையாக விளங்கிய பாரிவள்ளலின் சாயல், அம் மலைத் தலைவன் பால் அமையப் பாடியுள்ளார். பாரியும் பறம்பு மலையைத் தலைமையாகப் பெற்ற பறம்பு நாடென்ற மலை நாட்டிற்கே தலைவனாக இருந்தபடியால் அவனையே மலைசார்ந்த காதற்பாடல்களின் பண்புமிகு தலைவனுக்கு பெயர் சொல்லாமல் உருவகம் செய்து உட்கருத்தாகப் பாடுவது அவருக்கு எளிதாயிற்று.

ஐங்குறுநூற்றில் வரும் அகப்பாடல் தலைவனை "நாடு கெழு நெடுந்தகை குன்றம்" (நாட்டிற்குரிய பெருந்தகையாளனின் மலை) (ஐ.244) என்று அவர் குறிப்பிடுவது சாதாரணக் குடிமகனையன்று என்பது தெளிவு. தலைவனை 'புரையோன்' (உயர்ந்தோன்) என்று (ஐ.252) குறிப்பிடும் போதும், 'புரைய மன்ற புரையோர் கேண்மை (உயர்ந்தவரது நட்பும் உறுதியாக உயர்ந்ததாகும்). நற்.11

என்று குறிப்பிடும் போதும் அகப்பொருட் தலைவனைச் சுட்டும் அவர், பாரி வள்ளலையே உருவகித் தாரெனலாம்.

நற்றிணையில் முற்றிய தினையை, வளைந்தவாயுடைய பச்சைக்கிளிக் கூட்டம் நெருங்கிவந்து கூட்டமாக உண்ணும் காட்சி,

'வரையோன் வண்மை போல' (நற்.376)

(மலைமேல் வாழ்பவன் கொடைப்பண்பு போல உளது) என்கிறார். இங்கு கொடையில் பிற எவரினும் விஞ்சிநின்ற பாரியையன்றிப் பிறரெவரை அவர் உவமை கூற நினைவு கூர்ந்திருக்கக் கூடும்?

மலைக்காட்டிலே வேட்டையாடித் திரிபவன் தறுகண்மை வீரம் - மிக்க ஆண்பன்றி ஒன்றை நெருங்குகிறான். ஆனால் அது மிக்க சீற்றத்துடன் வேட்டைநாய்களை நெருங்கவிடாமல் விரட்டி விட்டு, வீரர்கள் தன்னிடம் அணுகாமல் தடுத்து, தன் பெண் பன்றியும் குட்டிகளும் தப்பித்துச் செல்லவிட்டு, தான் முன்னேவந்து ஒரு முடுக்கரில் - குறுகலான வளைந்த இடம் - நின்று கொண்டு வேட்டையாடுபவரைத் தாக்க எதிர்நோக்கி நிற்கிறது. இதைப் பார்த்த கானவன், தான் வில்லில் தொடுத்த அம்பை அப்படியே நிறுத்திக் கொண்டு,

"மடை செலல் முன்பில்தன் படைசெலச் செல்லாது
அருவழி விலக்கும்எம் பெருவிறல் போன்ம்" என (அகம்.248)

(மிக்க வலிசெறிந்த தனது படை ஓடவும் தான் பெயராமல் பகைவர் வரும் அரியவழியில் தடுத்து நிற்கும் எம்முடைய பெரிய தலைவனைப் போலும்) என்று வியந்து எய்யாமலே திரும்பி விடுகிறான்.

புலியொடு பொருத யானை, வெற்றி மகிழ்ச்சியுடன் தன் கிளையுடன் கூடித் திரியும். இங்கு தன் சுற்றத்தைக் காக்கும் பன்றியைப் பார்த்து, இது எம் தலைவனைப் போன்றது என்று மலைமேலுள்ள வேடன் அதைக்கொல்லாமல் செல்கிறான். இவையெல்லாம் பாரி தன் மக்களைக்காக்கும் சிறந்த வீரனாகத் திகழ்ந்தமையை நினைவிற்கொண்டு எழுந்தவை எனலாம்.

புறநானூற்றில் பரியைப் பற்றிப் புகழ்ந்துரைக்கும் பாடல் ஒன்றில், "அவனது செங்கோல் ஆட்சிச் சிறப்பால், பறம்புமலையில் பருவம் தவறாது மழை பெய்யும்" என்கிறார். ஐங்குறு நூற்றில் தலைவி யொருத்தி கிளிகளை அன்போடு பார்த்து, அவற்றின் அழகில் ஈடுபட்டு மகிழ்கிறாள். ஆனால் அவை தினைய அழிக்க

வந்து அமருமானால் சிறிதும் கருணையின்றிக் கவண் எறிந்து விரட்டுகிறாள் இங்ஙனம் அருளால் அணைத்து நோக்கவும், ஆணையால் கடிந்து வெருட்டவும் செய்தலால், அக்கொடிச்சி (மலைப்பெண்)

(அறஞ்செய்யும் நேரிய ஆட்சி தவறாத மன்னனிலும் இவள் மிகச் சிறப்புற்றாள் போலும்)

"அறம்புரி செங்கோல் மன்னனிற் தான்நனி
சிறந்தனள் போலும்" (ஐங். 290)

என்கிறார். பாரிவள்ளலையே மனத்துட்கொண்டு இவை எழுந்தனவாதல் வேண்டும் என்பதற்கு, புறநானூற்றில் அவர் பாரிவள்ளல் சார்ந்தார்க்கு, இனியனாகவும், பகைவர்க்கு இன்னாதவனாகவும் இருந்தான் என்றும், தன்னை இரந்து அடைந்தவர்க்கு உதவி செய்து, பகைத்தவர்களை வென்று வாழ்ந்தானென்றும் கூறிய செய்திகளனைத்தும் இங்கு ஒப்பிட்டு உண்மையறியத் தக்கனவாகும். (புறம்.)

பாரியை 'நீரினும் இனிய சாயல் உடையவன்' என்றும் (புறம் 105) 'இனியோன்' என்றும் (புறம் 115.) கபிலர் மனமுவந்து கூறியுள்ளார். நற்றிணையில் முதற்பாடலில் நின்ற சொல்லர், நீடுதோன்று இனியர் - (நிலைதவறாத வாய்மையுடையவர்; நெடிதாகத் தோன்றும் இனிமையுடையவர்) என்னும் போதும் ; 217 ஆம் பாடலில் 'நனிபெரிது இனியன்' (மிகவும் இனிமையுடையவன்) என்னும் போதும் மற்றும் பல இடங்களிலும் இனிமையும் நற்பண்புமுடையவனுக்கு உருவகிக்கும் பொழுதும் பாரியையே உருவகயாகக் குறிப்பிடுகிறார் என்று கருத இடமுளது.

இந்த அளவில் வெற்பினை பற்றிய உருவகக் காட்சியில், பாரியையே உருவகம் செய்துள்ளார் என்ற என் ஆய்வை நிறுத்தினால், படிப்பவர்க்கு என் கூற்றில் முழுநம்பிக்கை ஏற்படுமா என்பது ஐயமே. ஐங்குறுநூற்றில் வரும் குன்றுக் காட்சியைப் போலக் கலித்தொகையில் அடுத்தடுத்து வரும் வெற்பனைப் பற்றிய காட்சிகள் சிலவற்றையும் எடுத்துக்காட்டினால்தான் அச்சிறு ஐயம்தானும் மறைந்து, என் கூற்றை ஒப்புக்கொள்வர் என நம்புகிறேன்.

கலித்தொகைப் பாடல்களில் ஒவ்வொன்றிலும் அகப்பொருட்தலைவனைப் பற்றிய செய்திகள், பிற சங்க கால அகப்பாடல்களனைத்திலும் காணாத புதுமையுடன் மிக்க பெருமை தோன்றக் கூறப்பட்டுள்ளன. வேறு எப்புலவரும்

எவ்விடத்தும் கூறாதமுறையில் அகப்பாட்டுத்தலைவன் குறிஞ்சிக் கலியில் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளான்.

'தன் உற்றார்

இடுக்கண் தவிர்ப்பான்' தன்னை அடைந்தவரது துன்பத்தைப் போக்குபவன் என்றும்,

'தொல்எழில் தோய்ந்தார் தொலையின், அவரினும்

அல்லற்படுவான் மலை'

(தனக்குரியராயினாரின் முன்னைய அழகு கெட்டால், அதற்காக அவரைக் காட்டிலும் வருந்துபவன்) என்றும் வருவன, அகப்பாடலில் வரும்தலைவனை மிக உயர்ந்த (கலி.40) ஒருவனாக உருவகம் செய்ததாகவே உள்ளன.

பிறிதொரு பாடல் தலைவன், 'அவன் நீரினும் இனிய சாயலை உடையவன். தன்பால் விரும்பி வந்தவர்க்கு தேர்களைக்கொடுக்கும் கொடைக்குணம் உடையவன்' (கலி.42) என்று போற்றப்படுகிறான். மற்றொரு கலிப்பாடல் தலைவனைத் தோழி,

'நீயே

வளியின் இகல்மிகும் தேரும் களிறும்

தளியிற் சிறந்தனை – வந்த புலவர்க்கு

அளியொடு கைதூவலை' (கலி.5)

தலைவ, நீ காற்றிலும் விரைவாக செல்லும் தேர்களையும், ஆண் யானைகளையும் அருளோடு – மழைபோலக் பாடி வந்த புலவர்களுக்குக் கொடுப்பதில் தவறாதவன் ஆவாய் என்று பாராட்டுகிறாா். எந்த அகப்பாடலில் வரும் தலைவனும் தேர்களையும் யானைகளையும் பரிசிலாகக் கொடுப்பவனென்று இங்ஙனம் பாராட்டப்படவில்லை. புறப்பாடல்களில் வரும் செய்திபோலவே உள்ள இதனை அகப்பாடலில் பாரியின் பெயர் குறியாமல் கபிலர் எடுத்தாளுகிறார். தேர்களையும், களிறுகளையும் பரிசிலர்க்கு வாரி வழங்கியவன் பாரியினது தோற்றத்தை உடையவனாக இருப்பதால் இந்த வெற்பன் உருவகம் பாரி பற்றியதே எனலாம்.

கலி 47ஆம் பாடலில் வரும் தலைவனைப் பொறுத்தவரை, முழு

படப்பிடிப்பாகப் புனையப்பட்டுள்ளான். "ஒன்றை இரப்பவனைப் போன்ற எளிமை உடையவனானாலும் உலகத்தைப் புரப்பவனைப் போன்ற வலிமை உடையவன். அறிவில் வல்லவர்களை வழிபட்டு மெய்ப்பொருளைக் கற்றுக் கொண்டவனைப் போல, நல்லவர்கள்பால் தோன்றும் அடக்கமும் உடையவன். வறியவர்தம் துன்பத்தைப் போக்கவல்லவன் போன்ற பொருள் வலிமையும் உடையவன்". (கலி.47) கலித்தொகையிலே கூட, வேறு திணைகளைச் சார்ந்த பாடல்களில் தலைவனை இவ்வளவு புகழ்ந்துரைக்கும் பகுதிகளைச் சிறிதும் காண முடியாது. கபிலருடைய பாடல்களிலேதான் – சிறப்பாக இக்கலித்தொகைப்பாக்களிலேதான் பாட்டுடைத்தலைவர்களை இவ்வளவு புகழ்ந்துரைக்கும் போக்கைக் காண்கிறோம். இதற்கெல்லாம் தம்மைப் புரந்த பாரிவள்ளலைக் கபிலர் மறக்க வொண்ணாமற் போனதே என்பது மறுக்கவொண்ணாத உண்மையாகும்.

பாரி வள்ளல், நாத் தழும்பு ஏறப் பாடாதாயினும் முல்லைக்குத் தன் பொன்தேரைக் கொடுத்து - நிறுத்தி விட்டு வந்தவன் (புறம்.200) பெருவேந்தர்களைக் கடந்தும் அதிகமாகக் கொடுத்தும் பெரும் புகழ் பெற்றவன் (புறம்.119), கொடைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன். அக்குறிக்கோளாலேயே தன்னை அழித்துக் கொண்டவன் என்றும் கூறலாம்.

"இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கலாற்றாக்கால்
தன்மெய் துறப்பான் மலை" (கலி 43)

(தமது வறுமையைக் கூறி இரப்பவர்க்கு அதை நிறைவேற்ற முடியாத பொழுது தன் உடலையே தியாகம் செய்பவனது மலை)

"செறாஅது ஈதல், இரந்தார்க்கு ஒன்று ஆற்றது வாழ்தலின்
சாதலும் கூடுமாம் மற்று" (கலி 61)

(இரந்துவருபவர்மேல் கோபங்கொண்டு மறுக்காமல் ஒன்றைக்கொடுக்க வேண்டும். அது முடியாதவிடத்து வாழ்தலைவிடச் சாதலும் எளிதில் கை கூடுவதாகும்)

இதே பாடலில்,

"இவள் தந்தை காதலின் யார்க்கும் கொடுக்கும் விழுப்பொருள்
யாது நீ வேண்டியது"

இவன் தந்தை அன்பினால் யார்கேட்பினும் சிறந்த பொருள்களைக்

கொடுப்பான். உனக்கு என்ன வேண்டும் என வருகிறது. இவையெல்லாம் பாரியின் தியாகத்தையே உருவகிப்பன என்பதற்குச் சிறிதும் ஐயம் இல்லை என்றே நான் கருதுகிறேன். மூவேந்தர் முற்றுகையால் பறம்பு பணியவில்லை என்றாலும், பல்லாண்டு முற்றுகை நீடித்ததால், இரந்து வருபவர்க்கு ஈயமுடியாத நிலை ஏற்பட்டு அதனால் பாரி உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்டானோ என்று நினைக்கத் தூண்டுகிறது.

புறநானூற்றில் கபிலர் வடக்கிருந்து உண்ணாநோன்பு மேற்கொண்டு உயிர்விடப் போகையில், முன்பு பாரி தன்னை உடன் உயிர்நீக்க வேண்டாம் என்று தடுத்து விட்டதைச் சொல்லிப் புலம்புகிறார். உடன்பழகிய நட்புக்கு மாறாக நடந்து கொண்டானே என்று நோகிறார். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த போது உடன் உயிர் நீக்கவந்த பொத்தியார் என்ற புலவரை அவர் மனைவி குழந்தை பெற்ற பிறகு வடக்கிருக்கலாம் என்று தடுத்த நிகழ்ச்சி இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இவற்றிலிருந்து இல்லையென்று சொல்லி வந்தவர்க்கு ஈதல் இசையாத போது, பாரி உண்ணாநோன்பு இருந்து உயிர்விட்டானோ என்று கருத இடம் ஏற்படுகிறது.

பாரியின் பிற பண்பு நலன்களைக் கூறும் பொழுதும் அகத்தலைவர்களைப் பாரியாகவே உருவகம் செய்தாரெனபது வலிமையுறுகிறது. கலி 43ஆம் பாடலில், தன் செல்வம், புகழில் பொறாமை கொண்டு மனம் மாறுபட்டார்களென்றாலும், அவர்களுடைய குற்றத்தைக் கூறாதவனுடைய குன்றம் என்றும் பகைத்து வந்தால் எமனே எதிர்த்து வந்தாலும் தோற்கமாட்டான், தன் நண்பர்கட்குத் தோற்பதற்கோ வெட்கப்படமாட்டான் என்றும் வரும் பகுதிகள் மிக உயரிய பண்பு நலன்களை எடுத்துரைக்கின்றன.

'ஓர்வுற்று ஒரு திறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத்தவன்' (கலி 42)

ஒரு பக்கம் சரியாத நாவினையுடைய தராசுக் கோல் போல, அறநெறியில் மாறாத மனமுடையவன் என்ற பகுதி அரசநீதியையே சுட்டுவதாக உளது. இவ்வாற்றால் குறிஞ்சிக் கலித்தொகையில் வரும் பாட்டுடைத் தலைவர்கள் பாரியின் உருவகமே என்பதில் ஐயமில்லை.

நட்பு உருவகம் (The Image of friendship)

பாரி வள்ளலாகிய தோற்றமே, கபிலரின் பாட்டுத் தலைவர்களிடமெல்லாம் பிரதிபலிக்கிறது என்பதை இந்நட்புருவகத்தாலும் நிறுவலாம்.

'பெருநன்று ஆற்றில் பேணாரும் உளரே' (குறு.115)

பெருநன்மையொன்று செய்யப்பெற்றால் அதைப் பேணிப் போற்றாதாரும் உளரோ? என்று தோழி தலைவனிடம் கேட்கிறாள். 'பிறர் பிறர் படும்' துன்பம் எல்லாம் கண்டு மற்றவர்கள் நோவது உல இயற்கை. தாம் அடையும் துன்பமோ தமக்கு எளியதாகுமென்று மனத்தில் அடக்கிக் கொள்வர். (அ.382) என்று குறிப்பிடுகிறார். தோழியைப் பார்த்துத் தலைவி உதவி கேட்டு, "எனக்கு உதவி செய்து, இவள் இத்தகைய செயலைச் செய்தாள் என்று, நிலையற்ற உலகத்தில் நிலை பெறுமாறு நடந்து கொள்வாயாக" என்கிறாள். (கலி 54).

நட்பும் காதலும் கபிலரைப் பொறுத்தவரை வேறுவேறாகப்படவில்லை. நட்பைக் குறிப்பிட நட்பு, கேண்மை என்ற இரு சொற்களைக் கையாளும் அவர் (புறம்:) அகப்பாடல்களில் காதலைக் குறிப்பிடவும் அவ்விரு சாற்களையே கையாளுகிறார். (நற்.309, ஐங். 297)

அவர் காதலைப் பற்றிக் கூறுமிடமெல்லாம், அது நட்பு விளக்கமாகவே அமையக் காண்கிறோம். பெரியவர்கள் ஆராய்ந்து நட்புக்கொண்டாலல்லது, நட்புக் கொண்ட பின் ஆராயமாட்டார்கள் (நற் 32). 'நீ உன் காதலியை விட்டுப் பிரிந்தாலும், உன்னோடு பொருந்திய அவளுடைய நட்பு நெஞ்சம் பிரிவு அறியாத தாகும்'. (ஐங்.297). 'எக்காலத்தும் முதல்நாள் போன்ற நட்புடையவன், காதலன்' (ஐறு.385). "நாங்கள் பிரிவில்லாமல் இணைந்த தெவிட்டாத நட்புடையவர்களாவோம், இருதலைப்புள் என்ற இணைபிரியாத அன்றில் போல இருவரும் ஓருயிராவோம்" (அ 12). கிளிகள் தினையரிந்த பின்னும் தினைப் புனத்தை விட்டுப்போகாமல் பிரிதல் தேற்றாப் பேரன்பினவாக (ஐங் 285) (பிரிவை அறியாத மிக்க அன்புடையனவாக) உள்ளன. நம்மோடு விரும்பி அன்பு கொண்டவனது நட்பு பசப்புற்றாலும் (பிரிவால் நிறம் மாறினாலும்) நம் நட்புள்ளம் சிறிதும் பசப்புறுத் தளராது. (குறு : 264)

"கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்கல்நாடன்
இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற
இன்னாமையினும் இனிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே". (குறு : 288)

தோழி தலைவன் பிரிந்து சென்றதால் நல்லவன் அல்லன் என்கிறாள், தலைவி அதை எதிர்த்து, அன்புடையாரால் விளையும். துன்பமும் சொர்க்க

இன்பமாகும் என்று அழகாக வாதிடுகிறாள். (மிளகுத்கொடி வளர்கிற பக்கமலையில் தளிரை உண்ணுகிற குரங்குகள் ஒன்று கூடியிருக்கின்ற பெரிய மலைகளையுடைய நாட்டினனாகிய தலைவன், பிரிந்தானாயினும் நம்மிடம் இனிமை உடையவன் ஆவான். எனவே உறவுடையவர்களால் நேரும் துன்பத்தைக் காட்டிலும் இனிதெனப்புகழப்படும் சொர்க்கம் இனிமையுடையதாகுமோ?

பாரியுடன் கொண்ட நட்பால், கபிலர் உற்ற இடுக்கண்கள் பல, அவர் நினைத்திருந்தால் மூவேந்தரைப் பகைத்துக் கொண்ட பாரியை விட்டுவிட்டு ஓடிச் சென்றிருத்தல் கூடும். ஆனால் அவர் நட்புப் பிரிவு அறியாத, தெவிட்டாத நட்பாக இருந்தது. கபிலர் பாரியால் விளைந்த துன்பங்களை, சொர்க்க இன்பங்களினும் சிறப்புடையதாகக் கருதி ஏற்றுக்கொண்டார். இப்பாடல் 'பாரியால் பல துன்பங்கட்கு ஆளான கபிலர், நட்பின் திறத்தை நினைத்துப் பாடியது எனலாம். மேலும் கபிலரின் உள்ளத்துணர்ச்சியை நேரிடையாக வெளியிட்ட பாட்டு என்றும் கூறலாம். அவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் இப்பாடல் பாரியுடன் கொண்ட கபிலரது தொடர்பையே உருவகப்படுத்தித் தலைவன் தலைவியரிடையே உள்ள காதலாகக் காட்டுகிறது.

இவ்வாறு பாரி, பறம்பு பற்றிய ஆழ்ந்த பற்றுள்ளம் கபிலர் பாடல்களில் உவமைகளாகவும் உருவகங்களாகவும் வெளிப்படுகின்றன. இதன் மூலம் குன்றுக் காட்சி (Image) யை மிகுதியாக உடைய ஐங்குறுநூறும் குறிஞ்சி தலைவன் பற்றிய காட்சி (Image) யை மிகுதியாகவுடைய கலித்தொகையும் கபிலராலேயே பாடப்பட்டவை என்பதும் அவை கபிலர் பாரியை இழந்து, பறம்பை விடுத்துப் பிரிந்தபோது பாடியவை என்பதும் தெற்றெனப் புலனாகின்றன. பாரி இறந்த பிறகு சேரவேந்தன் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் காண வந்ததாகக் கபிலரே குறிப்பிடுகிறார். இதிலிருந்து பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை போல்வன கபிலரின் வயது சென்ற பிற்காலத்தில் பாடப்பட்டன என்பது விளங்கும். மேலும் கபிலரின் பாடல்களில் திரும்பத் திரும்ப புலி–யானை பகைமை மனமாறுபாடு பற்றிய உருவகக் காட்சிகளும், குறிஞ்சி நிலத்தலைவனைப்பற்றிய மிகச்சிறந்த உருவகக் காட்சிகளுமே வருவதால் இவை அனைத்தும் ஒரே சமயத்தில் பாடப்பட்டன என்பது விளங்குகிறது. மேலும் கலித்தொகையில் வரும் ஐந்து திணைப்பாடல்களிலும் கூடல், கூடலார், தென்னன் என்று பாண்டியரைப் பற்றிய சொல்லாட்சிகள் காணப்படுதலால் கலித்தொகை பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரையில் பாடப்பட்டதென்பது விளங்குகிறது. மொழிநடை, கற்பனைப் போக்கு, பா வடிவம் ஆகிய படைப்புகளால் கலித்தொகைப் புலவர்

ஐவரும் தம்முள் கூடி இங்ஙனம் பாடுவோம் என ஒரு முடிவு செய்து கொண்டு, பாடியன போல இவை ஒரு திறப்பட அமைந்துள்ளன. பாரி இறந்த பிறகு, கபிலர் மூவேந்தர் நாடுகளுக்கும் சென்றார் என்பதும் தமது புலமைச் சிறப்பால் கடந்த கால மன மாறுபாடுகளை விடுத்து மூவேந்தர்களும் போற்றுமாறு வாழ்ந்தார் என்பது இதன் மூலம் விளங்குகின்றன. ஐங்குறுநூறும் இங்ஙனம் உடனிருந்து. கூடிக் கலந்து பேசிப் பாடியதாதல் அதில் ஒவ்வொரு திணைப்பாடலிலும் திருப்பத் திரும்ப வரும் காட்சி உருவகம் (Image) மூலம் வலிமையுறுகிறது. பதிற்றுப்பத்தும் இதுபோலவே சற்று முன்பின்னாகப் பாடப்பெற்றுத் தொகுக்கப்பெற்றுளது எனலாம். ஏனைய தொகை நூல்களிலுள்ள பாடல்களனைத்தும் சிறிது காலத்தால் முற்பட்டனவாகவும், பிற்பட்டனவாகவும் தோற்றுவதனால் அவை தொகுக்கப்பட்ட காலமும் இக்கலித்தொகை முதலியன இயற்றப்பட்ட காலமும் ஒன்றே எனலாம்.

இந்நூலைப் பற்றி . . .

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில், யான் முனைவர் பட்டத்திற்காகச் சங்க இலக்கியத்தைத் திரும்பத் திரும்பப் படித்த பொழுது, இக்கட்டுரையையும் ஆங்கிலத்தில் எழுதி, என் ஆய்வேட்டின் பின்னிணைப்பில் சேர்த்திருந்தேன்.

பிறகு நானே அதைத் தமிழாக்கம் செய்தேன். காட்சி உருவகம் என்பது ஒப்பிலக்கிய அணுகு முறைகளில் ஒன்று. ஐம்புலன்களுக்கும் மனத்திற்கும் நேரடி அனுபவம் போலக் கவிதை புனைவது அது, எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் மிகுதியாகப் பாடிய புலவர் கபிலர். அவரின் அகப்பாடல்களில், பாரியும் பறம்பு மலையும் மூவேந்தர் முற்றுகையும் போல்வன, கண்ணெதிரே தோன்றுமாறு, அவை காட்சி உருவகங்களாகப் பாடப்பட்டுள்ளமை வியப்பளித்தது.

பாரி, பறம்பு என்று பெயர் சுட்டாமல், ‘காட்சி’ அளிக்கப்பாடுவது, கவித்திறனின் உச்சியாகும்.

குறிஞ்சி என வருவன எல்லாவற்றையும் அவர் மீது சுமத்தி விட்டார்களென்றும் குறிஞ்சிக் கலி, குறுஞ்சி நூறு எல்லாம் அவர் பாடியன அல்ல என்றும் விவாதித்தவர்கட்கு, இவ் ஆய்வு மறுப்புரையாகும். சுவை கபிலர் பாடியவையே என உறுதிப்படுத்துவது, இவ் ஆய்வின் பயனாகும்.